# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 67/2013

வாதிகள் தரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. R.சத்தியவதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் : தங்கவேலம்மாள் வா.சா.2 தாலுகா :

த/பெ : தொழில் :

கிராமம் : வயது :

---

முதல் விசாரணை - 27-02-2026

2 ம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் ஏற்கனவே சாட்சியமளித்த வா.சா.1, 1 ம் வாதிக்காகவும் சேர்த்துதான் சாட்சியமளிக்கிறேன் என்று சாட்சியமளித்துவிட்டு தற்போது அவர் சாட்சியத்தில் விடுபட்ட சங்கதிகளை நிரப்பும் விதமாக 1 ம் வாதியை தற்போது வா.சா.2 ஆக விசாரிக்க நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறார் என்று ஆட்சேபிக்கப்பட்டது.

நான் இந்த வழக்கின் 1 ம் வாதி. வாதிகள் தரப்பு 2 வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள இடது கை பெருவிரல் கைரேகை என்னுடையதுதான். படிக்கக் கேட்டு விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கைரேகை செய்தேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(1) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 31.03.1972 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் தாவா சொத்து எதுவும் கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல, உள்ளது. 1972 ல் கிரையம் பெற்ற பின்பு தாவா சொத்தில் இருந்த வீட்டை

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.27 17:45:39 +0530

இடித்து புதிதாக கட்டுமானம் கட்டினேனா என்றால் கட்டினேன், 1 அடி தெற்கே போட்டு கட்டியிருக்கிறேன். நான் சொல்லும் 1972 கிரையப்பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் கிழமேல் தென்வடல் அடி அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தமாக எனது மகன் மட்டும் தான் வழக்கறிஞரை சந்திக்க செல்வார் என்றால் சரிதான்.

(2) நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை எனது மகன் அசோகன் தான் வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றும், வா.சா.1 சாட்சியத்திலுள்ள குறைபாடுகளை நிரப்புவதற்காக வேண்டுமென்றே எந்த ஆதரவும் இல்லாமல் தாக்கல் செய்த என்னுடைய நிரூபண வாக்குமூலம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா 3 வது இலக்க சொத்திலிருந்து 4 வது இலக்க சொத்து வழியாக 40 ஆண்டுகளுக்கும் மேலாக நான் புழங்கி வருவதாகவும், எனது வீட்டின் கழிவு நீரை அதன் வழியாக கடத்தி வருவதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.27 17:45:46 +0530